முருகப்பெருமான் துணை

**முருகப்பெருமானே தாங்களும் தங்களால் உருவாகிய மகான் அகத்திய மகரிஷி முதலான நவகோடி சித்தர்களின் தலைமையில் விரைந்து உலகப் பெருமாற்றம் நிகழ்த்திடவும் அந்த உலகப் பெருமாற்றத்தில் துறையூர் ஓங்காரக் குடிலாசானும் அவரது தொண்டர்களும் கலந்து தொண்டு செய்திட அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

13.04.2021, செவ்வாய்க்கிழமை

1. ஓங்கார சக்தியே அரங்கா வாழ்க
ஓங்கார ஞானியே தேசிகா வாழ்க
ஓங்காரன் சுப்ரமணியர் யானும் இனிதே
ஓதிடுவேன் உலகப்பெருமாற்றம் குறித்த அறிவுரை ஆசி
2. ஆசியதும் அரங்கனும் அரங்கன் சீடர் பெருமக்களும்
ஆற்றல் மிக்க ஓங்காரக்குடிலின் பங்குமான
நேமமுடன் அறிவுரை ஆசி தன்னை
நிலமதனில் அரங்கன் கேட்க
3. கேட்கவே சார்வரி ஆண்டின் கடைநாள் தன்னில்
குறையிலா ஆசி அறிவுரை உரைப்பேன்
திட்டமுடன் அரங்கன் தர்மம் வளர்ந்து வருகுதப்பா
தவசி உன்தொண்டர் கூட்டமும் பெருகிவர
4. வருகின்ற பிலவ ஆண்டு தொட்டு
வையகத்தில் உலகப் பெருமாற்றத்துக்கு உண்டான
தருவேன் ஆறுமுகன்யான் சூட்சும சக்தியும்
தவசி அரங்கன் குடிலிற்கு இன்னும் பலமும் அருள்வேன்
5. அருளவே தொண்டர் படைகளும் பெருகி
அரங்கன் தர்மமும் வளர்ந்து
பெருமைமிக்க ஞானவான்கள் கூட்டமாகி
பெருமாற்றம் பிலவஆண்டில் நிகழக்கூடும்
6. கூடவே அஞ்ஞானவான்கள் எல்லாம்
குருராஜன் சக்தி அறிந்து உணர்ந்து தெளிந்து
நாடி வந்து ஓங்காரக் குடிலில் சரணடைய நேரும்
ஞானஆட்சிக்கு உண்டான சக்தியாக மாறும்
7. மாறுதலை ஒரே குடையின் கீழ் மகத்துவம்பட
மகான் சுப்ரமணியர் யானும் இயக்கி வருக
ஆறுதலாக இந்தமாற்றம் உலகிற்கு
அரங்கஞானி குடிலில் இருந்தே துவங்க நேரும்
8. நேர்மை கொண்ட உலக மக்களை
நீதிமான்களை தர்மவான்களை ஒன்றிணைக்கும்
பெருமைமிக்க சபையாக ஓங்காரக்குடில்
பேருலகமெங்கும் அறியப்பட்டு இனிதே

9. இனிதே உலகமாற்றத்தை
இயம்பிய ஆறுமுகன் யானே செய்து முடிப்பேன்
துணிவுபட அரங்கன் தொண்டர் படைக்கு
தூய ஞானஆட்சி வேண்டி ஆசி தந்தேன்

10. தந்துமே ஞானவான்கள் தயங்கி நிற்க
தர்மசேவை எண்ணி அஞ்சி நிற்க
சிந்தைபட இந்த தேர்தல் களத்தின் முடிவு
செப்பிடுவேன் ஞானஆட்சிக்கு சாதகமாய் இல்லையப்பா

11. அப்பப்பா ஞானவான்கள் அஞ்சி நின்றதாலே
அரசியலில் இன்னும் மாற்றம் நிகழவில்லை
ஒப்புகொண்டு நடந்த தேர்தல் மூலம்
ஒரு மாற்றமும் தமிழகம் இந்தியா தன்னில்

12. தன்னிலே நிகழப் போவது இல்லையப்பா
தகுதியிலா அரசியல் கட்சிகள் ஈடுபாட்டால்
இன்னல்தான் முடிவில் காண நேரும்
இந்த தேர்தல்வழி நன்மை இல்லை இல்லை

13. நன்மையான காலங்கள் உருவாகிட
ஞானவான்களின் கட்டமைப்பை பலப்படுத்தி
உண்மைபட இனிவரும் தேர்தல் களம்
உயர்வாக அமைந்திட சேவை புரிய வேண்டும்

14. வேண்டிவேண்டி அரங்கர் வழிகாட்டலில்
விடாது தொண்டர்கள் பின்பற்றி வந்து
தொண்டாற்றி சேவை புரிவதோடு
தேசிகனின் அவதாரத்தை உணர வேண்டும்

15. வேண்டி வருகின்ற உண்மை தொண்டர்மூலமே
விரைந்து உலகமாற்றம் நிகழ உண்டான
தொண்டுகள் நிறைந்த ஞானஆட்சி தருவேன்
தூய சத்தியசோதி அமைப்பை உலகறியச் செய்து

16. செய்துமே ஞானவான்களை ஒன்றிணைத்து
சிறப்பான அரசியல் களம் காணச் செய்வேன்
மெய்ஞானம் பெற்ற மக்களையே
முதல்வராக்கி பிரதமரும் ஆக்கி செயல்படுத்துவேன்

17. செயல்பாட்டில் நடைமுறையில் தயவில்லாத
சேவர்களை அதிகார வர்க்கங்களை
தயவின்றி முடக்கி தகர்ப்பேன்
தலைமை தொடரா அகற்றி வைப்பேன்

18. வைப்பேன் தர்மபலம் கொண்டவருக்கும்
வாய்ப்பு தந்து சிறப்பு தருவேன்
ஐயன் முருகன் என்வழிபாட்டோடு
அரங்கனின் தயவே சிறந்த வழிகாட்டல் என நம்பி வருவோரை

19. வருவோரை வழிநடத்தி வாழவைப்பேன்
வருங்கால அரசியலில் சேவைபுரிய செய்து
அழியாமை தந்து அவர்கள் தலைமையில்
ஆன்மீக ஞானஆட்சி மலர வகை செய்வேன்

20. செய்வேன் பிலவஆண்டில் சில அற்புதங்களை
சிவராஜயோகி அரங்கன் விரும்பி கேட்க
ஐயன் முருகனும் அற்புதமாக நடத்தி அருள்வேன்
ஆன்மீக ஞானபலம் கொண்ட உலகமாற்றம் நிகழ்த்துவேன்

21. நிகழ்த்திட நிலவுலகம் பாதுகாப்புற
ஞானஆட்சி ஞானிகள் ஆட்சியாக
யுகம்கண்டிட சிறப்பு பெற்றிட
உலகமக்களே ஓங்காரக்குடில் நோக்கி வாரீர்

22. வாரீர் வாரீர் முழுமதிகாலம் தன்னில்
வரங்கள் பெறவும் நல்லதலைமை உருவாகவும்
வாரீர் வாரீர் அரங்கன் அருள் நோக்கி
வாரீர் வாரீர் அரங்கன் அறத்தினை நோக்கி

23. நோக்கியே உதவிதனை செய்து கொண்டு
நீதிமான்களாய் தர்மவழி கடைபிடிக்க
தேக்கமின்றி உலகமாற்றம் சடுதி நிகழும்
திருவருளாக அரங்கன் அருள் வழி அற்புதம் நிகழும்

அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–